**IN THE COURT OF ADDITIONAL CHIEF JUDICIAL MAGISTRATE, KUMBAKONAM**

| | | |
|---|---|---|
| **MCOP No. 42/2024** | **நாள் – 20.04.2026** | **சாட்சி – எ.ம.சா.2** |

*Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Act 44 of 1969).*

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கார்த்திக் | தந்தை பெயர் | சுப்ரமணியன் |
| ஊர் | கிளியனூர்பட்டி | தாலுக்கா | துறையூர் |
| தொழில் | ஓட்டுநர் | வயது | 26/2026 |

**முதல் விசாரணை:**

நீதிமன்றத்திலிருந்து கிடைக்கப்பெற்ற சாட்சி அழைப்பாணையின் பேரில் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். எ.ம.சா.2 ஆக சாட்சியம் அளிக்கிறேன். விபத்து எந்த தேதியில் நடந்தது என்றால் 13.06.2023 அன்று விபத்து நடந்தது. விபத்து எவ்வாறு நடந்தது என்றால் டால்மியாபுரத்திலிருந்து மயிலாடுதுறையை நோக்கி சிமெண்ட் ஏற்றிக்கொண்டு நான் கபிஸ்தலம் மூப்பனார் பள்ளி அருகே S வளைவில் Speed Break ல் ஏறி இறங்கி செல்லும் போது எனக்கு பின்னால் 3 நபர்கள் இருசக்கர வாகனத்தில் வந்தார்கள். அவர்கள் என்னை முந்தி செல்வதற்காக வலது புறத்தில் ஏறி முயலும் போது எதிரே TATA Ace வாகனம் எதிரே வந்து விட்டதால் இருசக்கரவாகனத்தில் சென்றவர்கள் உடனே பிரேக் போட்ட போது தவறி கீழே விழுந்து விட்டார்கள். அவர்கள் நான் ஓட்டி சென்ற வாகனத்தின் டிரைலரின் முன்பக்க சக்கரத்தில் விழுந்து விட்டார்கள். விபத்து நடந்த இடம் பள்ளி வளாகத்திற்கு முன்பு என்பதாலும் ஸ்பிடு பிரேக் இருந்ததாலும் நான் மெதுவாக தான் சென்றேன். விபத்திற்கு முழு காரணம் இருசக்கரவாகனத்தில் வந்த நபர்கள்தான்.

**மனுதாரர் தரப்பு குறுக்குவிசாரணை**

நான் விபத்து சமயத்தில் ஓட்டிய டேங்கர் லாரி வாகனத்தை தான் தற்போது ஓட்டுகிறேனா என்றால் ஆமாம். கார்த்திக் த/பெ. சுப்ரமணி, எண்.1/136, மாரியம்மன்

கோவில் தெரு, கிளியனூர்பட்டி, துறையூர் தாலுக்கா, திருச்சி மாவட்டம் என்பது எனது முகவரி என்றால் சரிதான். விபத்து சம்பந்தமாக கபிஸ்தலம் காவல் நிலையத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்கண்ட விபத்து சம்பந்தமான குற்ற வழக்கை அபராதம் செலுத்தி பாபநாசம் நீதிமன்றத்தில் முடித்துக்கொண்டேன் என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் குறிப்பிட்டுள்ள விபரங்களை வேறு நீதிமன்றத்தில் கூறியுள்ளேனா என்றால் இல்லை. மேற்கண்ட முதல் விசாரணையில் குறிப்பிட்டுள்ள விபரங்களை காவல் நிலையத்தில் வாக்கு மூலமாக கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. இரு சக்கர வாகனத்தை ஓட்டி வந்தவர் மீது ஏதாவது புகார் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. மேற்கண்ட விபத்திற்கு நான் தான் விபத்துக்கு காரணம் என்றாலும் அதனால் தான் குற்ற செயலை ஒப்புக்கொண்டு நீதிமன்றத்தில் அபராதம் செலுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. ஆனால் நீதிமன்றத்தில் அபராதம் செலுத்தியுள்ளேன். விபத்துக்கு காரணம் நான் தான் என்றாலும் குற்ற வழக்கு நடந்த நடுவர் நீதிமன்றத்தில் குற்ற செயலை ஒப்புக்கொண்டது போல் இங்கு ஒப்புக்கொண்டால் நான் இழப்பீடு தரவேண்டிவரும் என்று கருதி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரர் நிறுவனம் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

*Typed to my dictation in open Court, read over to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.*

G. MANIKANDARAJA, B.A., B.L.,

Digitally signed by G. MANIKANDARAJA, B.A., B.L.,
Date: 2026.04.20 17:42:55 +0530

*Additional Chief Judicial Magistrate,*
*Kumbakonam.*